**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.334/2020 வா.சா.1 மணிகண்டன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 11.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.A . Economics படித்துள்ளேன். என் மனைவி என்ன படித்துள்ளார் என்றால் 10 ம் வகுப்பு படித்துள்ளார். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் Farm Incharge ஆக உள்ளேன். என் சாட்சிய வாக்குமூலத்திலுள்ள முகவரியில் எவ்வளவு ஆண்டு காலமாக வசிக்கிறேன் என்றால் 1996 ல் இருந்து வசிக்கிறேன். இவ்வழக்கில் என் மனைவி தான் பிரதிவாதி என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். எதற்காக நான் என் மனைவி சார்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் நான் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி காரணத்தை நான் சாட்சிய வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) வாதி தங்கராஜ்க்கு பிரதிவாதி என்ன உறவு என்றால் அண்ணி முறை வரும். வாதி எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்தார் என்றால் எங்கள் சொத்தில் அவர் சொத்து இருப்பதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பு ஆவணங்கள் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

3) வழக்கு சொத்துக்கள் ஆதியில் முப்பிலி குடும்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். மேற்படி முப்பிலி குடும்பனுக்கு குப்புசாமி , செல்லம்மாள் ஆகியோர் தான் வாரிசு என்றால் சரிதான். முப்பிலி குடும்பன் இறப்பிற்கு பின்னிட்டு குப்புசாமி

தான் அவ்வீட்டில் வசித்தார் என்றால் அங்கு யாரும் வசிக்கவில்லை. அது காலியிடமாகவே இருந்தது.

4) வழக்கு சொத்திற்கு வடபுறமாக உள்ள வீடு ஆதியில் மாகாளி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மாகாளிக்கு அச்சொத்து எப்படி பாத்தியம் என தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் வாதி வீடு கட்டும் போது பிரதிவாதிக்கும் வாதிக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் வழக்கு சொத்திற்கு வடபுறம் உள்ள வீடு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என பிரதிவாதி கூறினார் என்றால் சரிதான். அவ்வாறு பிரதிவாதி சொன்னதன் அடிப்படையில் தான் வழக்கு சொத்திற்கு வடபுறம் உள்ள வீடு பிரதிவாதியின் வீடு என குறிப்பிட்டு உள்ளார் என்றால் சரிதான். அந்த வடபுற வீடு பிரதிவாதிக்கு எவ்வாறு பாத்தியம் என ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் பிரதிவாதிக்கு ஆதரவாக உயில் ஏற்பட்டு உள்ளது.

5) மேற்படி சொன்னவாறு ஒரு உயில் யாரால் எப்போது ஏற்பட்டது என என் சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லவும் இல்லை அவ்வாறான உயிலை தாக்கல் செய்யவும் இல்லை என்றால் என் சாட்சிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டு உள்ளேன் . உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வடபுற வீட்டிற்கு எந்த உரிமைமூல ஆவணம் தாக்கல் செய்தேன் என்றால் நான் எந்த உரிமை ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. அச்சொத்திற்கான உரிமைமூல ஆவணங்கள் என் வசம் உள்ளது என்றால் சரிதான். அந்த உரிமைமூல ஆவணங்களில் வடபுற சொத்தின் பரப்பளவு, நான்கு எல்லை மற்றும் அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் .

6) வடபுற சொத்தின் புல எண்ணும் ,பரப்பளவும் என்ன என்றால் புல எண். 995/2 பரப்பளவு 869 சதுரடி அதாவது 2 சென்ட் ஆகும். வடபுற சொத்தின் ஆவணங்களையும் வழக்கு

சொத்தின் ஆவணங்களையும் கருத்தில் கொண்டு அளந்தால் தான் இரு சொத்துக்கு இடையே உள்ள எல்லை நிர்ணயிக்க இயலும் என்றால் சரிதான். வடபுற சொத்தை நாங்கள் ஏற்கனேவே அளந்து தான் அனுபவித்து வருவதாக எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு உள்ளோம் என்றால் சரிதான். ஆனால் , எதிர் வழக்குரையிலோ என் சாட்சியத்திலோ வடபுற சொத்தின் அளவுகளை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் வடபுற சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என எதிர் வழக்குரையிலோ என் சாட்சியத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வடபுற சொத்தின் அளவுகளை காட்டும் ஆவணங்களோ , உரிமைமூல ஆவணங்களோ என் வசம் இல்லாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு எனில் அத்தகைய ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும் என்றால் முடியும். அவ்வாறு தாக்கல் செய்யாமல் இருக்க காரணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை.

7) வழக்கு சொத்திற்கும் வடபுற சொத்திற்கும் இடையே எவ்வளவு இடைவெளி உள்ளது என்றால் இடைவெளியே இல்லை. வழக்கு சொத்தில் வாதி எப்போது இருந்து வசிக்கிறார் என்றால் 2017 ல் இருந்து வசிக்கிறார். வழக்கு சொத்தில் வாதி எப்போது பழைய வீட்டை இடித்து புது வீடு கட்டினார் என்றால் அங்கு பழைய வீடே இல்லை. 2016 ல் தான் வாதி காலி இடத்தை அளவை செய்யாமல் வீடு கட்ட துவங்கினார். வாதி அப்போது அளவை செய்யாமல் வீடு கட்டியதாக சொல்லும் நிலையில் அச்சமயம் எனக்கு ஆட்சேபணை இருந்ததா என்றால் வாதி அவரது அளவிற்குள் வீடு கட்டுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. வாதி வீடு கட்டும் போது ஆட்சேபணை செய்து பஞ்சாயத்திலோ, பிற அதிகாரிகளிடமோ நாங்கள் புகார் ஏதும் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

8) வாதி இவ்வழக்கில் தான் கிரையம் பெற்ற 472 1/2 சதுரடி அளவிற்குள் சுற்றுசுவர் அமைத்து கொள்ள எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். வாதி இவ்வழக்கில் தான் கிரையம் பெற்ற 472 1/2 சதுரடி அளவிற்குள் சுற்றுசுவர் அமைப்பதில் நாங்கள் இடையூறு செய்யக் கூடாது என கோரி தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதியின் பட்டா மற்றும் உரிமைமூல ஆவணங்களை நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். வாதியின் பட்டா மற்றும் உரிமைமூல ஆவணங்களில் உள்ள அளவு மற்றும் பரப்பளவிற்கு எதிர் வழக்குரையில் நாங்கள் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கும் வடபுறம் உள்ள மாகாளியின் வீட்டிற்கும் இடையே சுற்றுசுவர் இல்லை என்றும் சிமெண்ட் சீட்டு தான் வைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். நாங்கள் அளவை செய்து அந்த சிமெண்ட் சீட்டை வைத்தோம் ஆனால் அதை அவர் அகற்றி விட்டார். தற்போது அங்கு சிமெண்ட் சீட்டு இல்லையா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள பாதி பூசப்படாத சுவர் தான் வாதிக்கு பாத்தியப்பட்ட வீட்டின் வடபுற சுவர் என்றால் சரிதான். ( **மேற்படி சுவரையும் ஒரு ஓட்டு வீட்டையும் காட்டும் புகைப்படம் வா.சா-ஆ. 15 ஆகவும் மேற்படி சுவரையும் ஒரு மாடி வீட்டையும் காட்டும் புகைப்படம் வா.சா-ஆ. 16 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**)

9) மேற்படி சிமெண்ட் சீட் வைக்கும் முன் அங்கு ஓலை தான் வைத்து இருந்தோம் என்றால் சரிதான். வாதி வீடு கட்டும் போது தான் ஓலையை எடுத்து விட்டு சிமெண்ட் சீட் வைத்தோம் என்றால் சரியல்ல . அதற்கு முன்பே ஓலை சேதமடைந்தால் சிமெண்ட் சீட் மாற்றினோம். அவ்வாறு சிமெண்ட் சீட் வைக்கும் போது பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. அப்போதே வாதி நாங்கள் அவரது இடத்தில் சிமெண்ட் சீட் வைப்பதாக பிரச்சனை செய்தார். அந்த சிமெண்ட் சீட் இருக்கும் வரை உள்ள இடம் தான் எங்கள் இடம் என்றால்

சரிதான். அந்த சிமெண்ட் சீட்டிற்கு தென்புறம் உள்ள சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

10) இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும் . ஆனால் அவர் அளவை செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நாங்கள் ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அளவை செய்யவில்லை என அளவை செய்யக்கோரி மனு தாக்கல் செய்து உள்ளோமா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் தாலுக்கா சர்வேயர் மூலம் அளந்து பார்த்தால் உண்மை நிலை தெரியும். அவ்வாறு அளவை செய்ய எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். அதற்கு எங்கள் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளோமா என்றால் தயாராக உள்ளோம்.

**(வாதி தரப்பில் நில அளவை கோரி மனு செய்ய அவகாசம் வேண்டும் என வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி